# "மாற்று அரசியலின் பன்முகங்கள்" நூல் வெளியீட்டு விழா!

## மதுரையில் நடந்தது!!




மதுரை,அக்.14—

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சமூகத்தளத்தில் எவ்வித சமரசமுமின்றி, நிதியுமின்றி, நேர்மையுடன் செயலாற்றி வரும் வழக்கறிஞர் சி.சே. இராசன் எழுதிய "மாற்று அரசியலின் பன்முகங்கள்" என்ற நூல் வெளியீட்டு விழா மதுரை அழகர்கோவில் சாலையிலுள்ள தமிழ்நாடு ஹோட்டல் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

நூலினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் சி. மகேந்திரன் வெளியிட தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் முன்னாள் முதல்வர் தியான்சந் கார் பெற்றுக்கொண்டார்.

சுயாட்சி இந்தியா அமைப்பின் தேசிய தலைவர் கிறிஸ்டினாசாமி, மனித உரிமை காப்பாளர் கூட்டமைப்பின் மூத்த வழக்கறிஞர் ஹென்றி திபேன் ஆகியோர் பேசினார். கத்தோலிக்க வழக்கறிஞர் சங்கத்தின் அமைப்பாளர் வழக்கறிஞர் பால்பிரிட்டோ, தமிழ் தேச மக்கள் முன்னணி தலைவர் மீ.த. பாண்டியன், சமம் குடிமக்கள் இயக்கத்தின் ஆலோசகர் முனைவர் வ. அருள்ராஜ், சமம் குடிமக்கள் இயக்க பொதுச்செயலாளர் ப. சண்முகவேலு மண்,மக்கள் மனிதம் பதிப்பக நிர்வாகி கவிஞர் மு. முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வினை நாட்டைக்காப்போம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் சந்தனம் நெறியாளுகை செய்தார். நிகழ்வுக்கு மூத்த பத்திரிகையாளர் ப. திருமலை தலைமை வகித்தார். உயர்நீதிமன்ற வழக்கறிஞர் இ. இராபர்ட் சந்திர குமார் வரவேற்றார். வழக்கறிஞர் எழிலரசு இளங்கீரன் நன்றி கூறினார்.